செ.வெ.எண்: 203 நாள்: 1.4.2021

**வாக்குப்பதிவு இயந்திரங்களில் கட்சி சின்னம் பொருத்தி முடிக்கப்பட்ட இறுதி பணிகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.**

---

புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்களில் கட்சி சின்னம் பொருத்தும் பணி நிறைவடைந்ததை அடுத்து Control Unit, EVM Machine, VVPat ஆகியவற்றின் பணிகள் இறுதி செய்யப்பட்டு, புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் சீல் வைக்கப்படுவதை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப.,அவர்கள் இன்று (1.04.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தல் ஏப்ரல் 6ல் நடைபெற உள்ளதையொட்டி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்களும் வாக்குப்பதிவு இயந்திரங்களை தயார் செய்யும் பணிகளில் முழுமையாக தங்களுடைய அலுவலர்கள் மூலமாக பணிகளை செய்து வருகின்றனர். பெல் பொறியாளர்கள் மூலமாக விவிபேடில் வேட்பாளர்களின் சின்னம் பொருத்தும் பணிகள் மாவட்டம் முழுவதும் முடிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களின் சின்னம் பொருத்தும் பணியானது வேட்பாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் முகவர்கள் முன்னிலையில மண்டல அலுவலர்கள் மூலமாக இப்பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிவடைந்த பின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் வாக்குப்பதிவு இயந்திரமானது சீல் வைத்து காவல் துறையினரின் பாதுகாப்புடன், பாதுகாப்பு அறையில் வைக்கப்படும்.

தொடர்ந்து மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்காணிக்கும் வகையில் அதிக அளவில் பறக்கும்படைகள், கண்காணிப்பு குழு அதிகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளிலும் 3 சுழற்சி முறையில் 10 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுக்களை கண்காணிப்பதற்காக மாவட்ட வருவாய் அலுவலர் அளவிலான அலுவலர்கள் அமைக்கப்பட்டு, பொது பார்வையாளர்கள்,செலவின பார்வையாளர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களும் மேற்பார்வையில் இவர்களுக்கு தகவல்கள் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தங்களது பணியில் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரால் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோன்று மாவட்ட அளவிலான மண்டல அலுவலர்கள் மூலமாகவும் திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக திருமயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நமணசமுத்திரம், திருமயம் மதுரை ரோடு பிரிவு பகுதிகளில் வாகன சோதனையினை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் நேற்று நள்ளிரவில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**